# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 0005/2017/ந

ஆணை எண்: 100/2017

நாள்: 05/05/2017

| | |
|---|---|
| 12.01.2017 நாளிட்ட காலச்சக்கரம் நாளிதழில் வெளிவந்துள்ள செய்தி | – தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் தாமாகவே பதிவு செய்யப்பட்டது |
| நகராட்சி ஆணையர், இராமேஸ்வரம் நகராட்சி. | – எதிர்மனுதாரர் |

## ஆணை

12.01.2017 நாளைய "காலச்சக்கரம்" நாளிதழில் இராமேஸ்வரம் நகராட்சியில், இராமேஸ்வரம் கோயிலைச் சுற்றி விதிகளை மீறி கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதாகவும், கடைகள் மற்றும் விடுதிகள் செயல்படுவதாகவும் செய்திகள் வெளிவந்தன மேலும், இராமேஸ்வரம் நகராட்சி ஆணையர் மீதும் இந்நிகழ்வுகள் தொடர்பாக ஊழல் குற்றச்சாட்டுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இச்செய்தியினை 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறை மன்ற நடுவம் தாமாகவே முறையீடாகப் பதிவு செய்து நகராட்சி ஆணையரது அறிக்கை கோரி ஆணையிடப்பட்டது.

அதன்படி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.44/2017/எ4 நாள்:13.03.2017 வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது.

மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

"இராமேஸ்வரம் இராமநாதசாமி கோயிலைச் சுற்றி தனியாருக்கு சொந்தமான 20-க்கும் மேற்பட்ட பயன்பாட்டு கட்டடங்கள் செயல்பாட்டில் உள்ளன. மேற்படி கட்டடங்களின் உரிமையாளர்களிடம் நேரடி விசாரணை மேற்கொண்டதில் அவரவர் பெயர்களில் உரிய பத்திரப்பதிவு ஆவணங்கள் இருப்பதாகவும், கோயில் நிர்வாகத்திடமிருந்து தங்களுக்கு எவ்வித அறிவிப்பும் வரப்பெறவில்லை எனவும் தெரிவித்தனர். மேலும், பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டுள்ளபடி தெற்கு வாசல் பகுதியில் வடநாட்டுக்காரரால் ஹோட்டல் கட்டடங்கள் ஏதும் கட்டப்படவில்லை.

கோயில் நிர்வாகத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ள கோயில் நிர்வாகத்திற்கு பாத்தியப்பட்ட கோயிலைச் சுற்றியுள்ள இடங்களிலுள்ள அனுமதியற்ற கட்டுமானங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்ற கோயில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து நிலத்தினை கையகப்படுத்த நீதி மன்றத்தில் வழக்கு தொடரலாம். இராமேஸ்வரம் நகராட்சியில் கட்டட அனுமதி உரிய விதிமுறைகளுக்குட்பட்டு, கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. அனுமதியற்ற கட்டுமானங்களுக்கு வேலை நிறுத்த அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், ஐயப்ப சாமி பக்தர்கள் அதிகம் வந்து செல்லும் காலங்களில் பேருந்து நிலையம் முதல் கோயில் வரை சாலைகளின் இருபுறங்களிலும் பட்டா இடங்களில் அமைக்கப்படும் தற்காலிக சீசன் கடைகளுக்கு நகர்மன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணங்கள் வசூல் செய்து கொள்ளும் பணிக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏலம் விடப்பட்டது. நகர் மன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட கூடுதலான தொகைகள் ஏதும் வசூல் செய்யப்படவில்லை."

மேற்படி அறிக்கையுடன் புகைப்பட ஆதாரங்கள் மற்றும் சில ஆவண நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி அறிக்கை மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த அனுமதியற்ற ஒரு குறிப்பிட்ட ஹோட்டல் குறித்து விவரம்/விளக்கம் பெற வேண்டியிருந்ததால் இராமேஸ்வரம் நகராட்சி ஆணையர் 23.3.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை எண்.0005/2017/ந நாள்: 05.03.2017ன்படி ஆணையிடப்பட்டது.

23.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான நகராட்சி ஆணையர் ஏற்கனவே அறிக்கை சமர்ப்பித்துள்ளதைக் குறிப்பிட்டும், கோயிலின் தெற்கு வாசலில் பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டவாறான வடநாட்டுக்காரர் ஹோட்டல் எதுவும் கட்டப்படவில்லை என்றும் எந்த ஒரு கட்டடமும் அனுமதியின்றி விதிமுறைகளுக்கு மாறாக கட்ட நகராட்சியால் அனுமதியளிக்கப்படுவதில்லை எனவும் வணிக கட்டடங்களில் மற்றும் நடைபாதை கடைகளில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுவதாகவும் உறுதிபடத் தெரிவித்தார்.

எனவே, பெறப்பட்ட அறிக்கை, ஆவணங்கள் மற்றும் விசாரணையின் அடிப்படையில் மேற்படி பத்திரிக்கைச் செய்தி நிருபணமாகாததால் மேல் நடவடிக்கை கைவிடப்படலாமென கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 5-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   இராமேஸ்வரம் நகராட்சி,
   இராமநாதபுரம் மாவட்டம்.

2. காலச்சக்கரம்,
   நாளிதழ் பதிப்பகம்
   (kalasakkaram@gmail.com)